*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2025** **05 ஜூன், 2025**

## பத்திரிகை செய்தி

புதுச்சேரி அரசு, அறிவியல், தொழில்நுட்பம், சுற்றுச்சூழல்துறை மற்றும் புதுச்சேரி மாசு கட்டுப்பாட்டு குழுமம் சார்பில் உலக சுற்றுச்சூழல் தினம் 2025 புதுச்சேரி கடற்கரை சாலை, காந்தி திடலில் இன்று(05-06-2025) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சுற்றுச்சூழல் விழிப்புணர்வு போட்டிகளில் பரிசு பெற்ற பள்ளி கல்லூரி மாணவ-மாணவிகளுக்கும் பரிசுகளும், சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் சிறப்பாக செயல்பட்ட அரசு துறைகளுக்கும் மற்றும் தொழிற்சாலைகளுக்கு விருதுகளும் வழங்கி சிறப்பித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் திரு ந. ரங்கசாமி, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு செல்வம், மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் திரு க. லட்சுமி நாராயணன், தலைமைச் செயலர் திரு சரத் சௌகான், அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல்துறை செயலர் திரு ஆஷிஷ் மாதவராவ் மோரே, சிறப்பு செயலர் திரு ஒய்.எல்.என். ரெட்டி ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர்.